அடகு நகை மீட்டு இன்றைய மார்க்கெட் விலைக்கு விற்க நீங்கள் இருக்கும் இடத்திலேயே உடனடி பணம்
நல்ல அணுகுமுறை
தொடர்புக்கு : 70944 40944
[அரசு அங்கீகாரம் பெற்றது]

admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

| Vol: 03 | Issue: 120 | 4 Pages | 29.11.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 120 | 4 பக்கங்கள் | 29.11.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்**
**அல்லற் படுப்பதூஉ மில்**

**விளக்கம்:**
**நல்ல இனத்தைவிடச் சிறந்ததாகிய துணையும் உலகத்தில் இல்லை, தீய இனத்தைவிடத் துன்பப்படுத்தும் பகையும் இல்லை.**

# இதுதான் எங்கள் அரசியல் மாண்பு; எதிர்காலத்தில் தொடர்ந்து நிலைக்க வேண்டும்: மு.க.ஸ்டாலின்

சென்னை, நவ.29

சென்னை, கலைவாணர் அரங்கில் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் மூன்றாம் பட்டமளிப்பு விழாவில், நடிகர் சிவக்குமார், ஓவியர் குருசாமி ஆகியோருக்கு வாழ்நாள் சாதனைக்காக மதிப்புறு முனைவர் பட்டத்தை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கி வாழ்த்தினார்.

அதன்பின்னர் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

உங்களை 'மாணவர்கள்' என்று அழைப்பதை விட, பட்டம் பெற்ற 'கலைஞர்கள்' என அழைப்பதே பொருத்தமானது. அனைத்து கலைஞர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள். குறிப்பாக அதிகமான பெண்கள் பட்டம் பெற்றிருப்பது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது. இவ்விழாவில் முதலமைச்சராகவும், பல்கலைக்கழக வேந்தராகவும் மட்டுமல்லாமல், நாடகம் மற்றும் திரைத்துறையில் பணியாற்றிய ஒரு கலைஞன் என்ற முறையிலும் பங்கேற்றதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

புகழ்பெற்ற நடிகர், ஓவியர், சிறந்த சொற்பொழிவாளர் என பல்துறை வித்தகரான அண்ணன் சிவக்குமாருக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமானதும் பெருமைக்குரியதுமாகும். அவரின் ஓவியங்களை கலைஞர் மிகவும் ரசித்திருக்கிறார். திராவிடமாடல்அரசின்கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக தம்பிகள் சூர்யா, கார்த்தி ஆகியோருடன் சேர்ந்து ரூ.1 கோடி நன்கொடை அளித்தவர் அண்ணன் சிவக்குமார்.

அம்மையார் ஜெயலலிதா பெயரை தாங்கியுள்ள டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை பல்கலைக்கழகத்திற்கு, எங்கள் ஆட்சியில் எந்தத் தனிப்பாகுபாடும் காட்டப்படவில்லை. பட்டமளிப்பு விழாவை புறக்கணிக்கவில்லை. 2021க்கு



பிறகு இந்த பல்கலைக்கழகத்தை மேலும் செயல்திறனுடனும், செழுமையாகவும் வளர்த்துள்ளோம். இதுதான் நான் நிறுவ நினைக்கும் அரசியல் மாண்பு. இந்த அரசியல் மாண்பு இடையே இல்லாமல் போயிருந்தாலும், எதிர்காலத்தில் இது தொடர்ந்து நிலைக்க வேண்டும்.

2021க்குப் பிறகு தமிழ்நாடு டாக்டர். ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தில் அதிக அளவில் மாணவர் சேர்க்கை நடைபெற்றுள்ளது பல்கலைக்கழக மேம்பாட்டிற்காக கூடுதல் நிதியும் திராவிட மாடல் ஆட்சியில் தான் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த பல்கலைக்கழகம் இன்னும் சிறப்பாக வழிநடத்தப்படும்.

டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்தில் ஊதியம் மற்றும் நிர்வாக செலவிற்கான மானியத்தொகை ரூ.3 கோடியில் இருந்து ரூ.5 கோடியாக உயர்த்தப்படும். பறையிசைக் கலைஞர் வேலு ஆசான் கோரிக்கையை ஏற்று மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் வட்டம் வளையங்குளத்தில் கிராமிய கலை பயிற்சி பள்ளி அமைக்க அரசின் சார்பில் நிலம் ஒதுக்கீடு செய்யப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்பூர் கிழக்கு மாவட்டம் தாராபுரம் மேற்கு ஒன்றியம் மாணவரணி மற்றும் சின்னக்காம்பாளை யம் பேரூர் கழக மாணவரணி நடத்தும் மரம் நடும்விழா

திருப்பூர் கிழக்கு மாவட்டம் தாராபுரம் மேற்கு ஒன்றியம் மாணவரணி மற்றும் சின்னக்காம்பாளையம் பேரூர்கழக மாணவரணி நடத்தும் மரம் நடுவிழா துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு காங்கயம் பாளையத்தில் உள்ள அரவணைக்கும் கருணை இல்லத்தில் உள்ள மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது மற்றும் மரம் நடப்பட்டது. எஸ் வி செந்தில் குமார் அவர்கள் தலைமையில் பேரூர்கழக செயலாளர் ர.பன்



னீர்செல்வம் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இவ்விழாவில் பேரூர் கழக அவைத்தலைவர் சி சுப்பிரமணியம் மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சன் பாலு மேற்கு ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் தமிழ்ச்செல்வன் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் குகன் பேரூர் ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் ஐடி வின் மாவட்ட துணை அமைப்பாளர் ஆனந்தி மற்றும் பேரூர் இளைஞர் அணி மாணவர் அணி பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்

# இனி ஓடவோ, ஒழியவோ முடியாது தேனி மாவட்டத்தில் தானியங்கி கண்காணிப்பு கேமரா அமைப்பு - விதிமீறுபவர்களுக்கு தப்ப வழியில்லை



இனி ஓடவோ, ஒழியவோ முடியாது தேனி மாவட்டத்தில் தானியங்கி கண்காணிப்பு கேமரா அமைப்பு – விதிமீறுபவர்களுக்கு தப்ப வழியில்லை போக்குவரத்து விதிமீறல்களை தடுக்க நவீன தொழில்நுட்பம் கொண்ட தானியங்கி கண்காணிப்பு கேமரா அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அதிகம் கூடும் முக்கிய இடங்கள் மற்றும் மாநில எல்லைப் பகுதிகளை உள்ளடக்கி மொத்தம் 32 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

தேனி நேரு சிலை, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை வெளிப்புற வாசல், பழனிச்செட்டிபட்டி, குமுளி, கம்பம் மெட்டு, போடிமெட்டு உள்ளிட்ட இடங்களில் கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன. குறி ப்பாக, தேனி நேரு சிலை அருகே 2 ANPR கேமராக்கள் மற்றும் 1 IP கேமரா அமைக்கப்பட்டுள்ளன.

ஆண்டிப்பட்டி – திம்மர ச்சநா யக்கனூர் சோதனைச் சாவடியில் 4 IP கேமராக்கள், 4 ANPR கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வெளிப்புறப் பகுதியில் தலா இரண்டு கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த கேமராக்கள் Optical Character Recognition (OCR) தொழில்நுட்பத்தின் மூலம் வாகன எண்களை துல்லியமாகப் பதிவு செய்யும். அனைத்து காட்சிகளும் உடனுக்குடன் மாவட்ட கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பப்படுகின்றன. அங்கு போலீசார் 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

போக்குவரத்து விதிகளை மீறுபவர்கள் இனி ஓடவோ, ஒழியவோ முடியாது என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

# மருத்துவத்துறையில் காலிப்பணியிடமே இல்லை அமைச்சர் மா.சுப்பிரமணியன்

சென்னையில் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

சுகாதாரத்துறையில் ஒரு காலிப் பணியிடமாவது எங்கேயாவது இருக்கிறதா என்பதை காட்டுங்கள்; ஜீரோ காலிப்பணியிடங்கள் என்ற வகையில் மருத்துவத்துறையில் பணி நியமனங்கள் செய்யப்பட்டு வருகின்றன 1.75 லட்சம் பேர் பணிபுரியும் மருத்துவத்துறையில் காலிப் பணியிடமே இல்லை என்ற நிலை தற்போதுதான் உள்ளது.

மருத்துவத்துறை வரலாற்றிலேயே கலந்தாய்வு நடத்தி வெளிப்படைத் தன்மையோடு பணியிட மாற்றங்கள் கொடுப்பது திமுக அரசு ஆட்சியில்தான். கடந்த ஆட்சிக் காலங்களில் ஊழல், முறைகேடு போன்றவை நடந்தபோது ஒருவரும் வாய் திறக்கவில்லை. ஆனால் தற்போது வெளிப்படைத் தன்மையோடு பணியிட மாறுதல் வழங்கப்படுகிறது.

அனைத்து மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் முழுநேரம் பணியில் இருக்க அறிவுறுத்தியிருக்கிறோம். மழைத்தொடங்கிய பிறகு ஏதாவது பகுதிகளில் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டால் உடனடியாக மழைக்கான சிறப்பு மருத்துவ முகாம் அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அனைத்து மருத்துவமனைகளிலும் முழுநேரம் மின்சாரம் தடைபடாமல் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மழை பெய்தால் மருத்துவமனையில் தண்ணீர் வரும் என்ற நிலை பெரும்பகுதியான மருத்துவமனைகளில் தற்போது இல்லை. தமிழ்நாட்டை பொறுத்தவரையில் ஏறத்தாழ 14 ஆயிரம் மருத்துவ கட்டமைப்புகள் இருக்கிறது. அனைத்திலும் பார்த்து பார்த்து முடிந்தவரை மழைக் காலங்களில் மழைநீர் தேக்கம் இல்லாதவாறு பார்த்துக்கொள்ளப்படுகிறது. தமிழகம் முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# கோவாவில் 77 அடி உயர ராமர் சிலையை திறந்து வைத்தார் பிரதமர் நரேந்திர மோடி

பனாஜி, நவ.29

தெற்கு கோவாவின் பர்தகாலி பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ சமஸ்தான கோகர்ண ஜீவோட்டம் மடத்தின் 550வது ஆண்டு விழாவில் பிரதமர் மோடி கலந்து கொண்டார். இந்த விழாவின் ஒரு பகுதியாக 77 அடி உயரம் கொண்ட வெண்கல ராமர் சிலையை பிரதமர் நரேந்திர திறந்து வைத்தார்.

குஜராத்தில் உள்ள ஒற்றுமை சிலையை வடிவமைத்த சிற்பி ராம் சுதர், இந்த ராமர் சிலையை உருவாக்கியுள்ளார். மேலும், இது உலகின் மிக உயரமான ராமர் சிலை என கோவா பொதுப்பணித்துறை மந்திரி திகம்பர் காமத் தெரிவித்துள்ளார். இந்த விழாவில் கோவா முதல்மந்திரி பிரமோத் சாவந்த், கவர்னர் அசோக் கஜபதி ராஜு ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காதலியை சுட்டுக்கொன்று வாலிபர் தற்கொலை அதிர்ச்சி சம்பவம்

அகர்தலா, நவ.29

திரிபுரா மாநிலம் கோமதி மாவட்டத்தில் உள்ள ஹோலாஷெட் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு காரில் நேற்றுமுன்தினம் மாலை இளம்பெண் ஒருவர் துப்பாக்கியால் சுடப்பட்டு பிணமாக கிடந்தார். அருகில் வாலிபர் ஒருவர் ரத்தவெள்ளத்தில் துடித்துக் கொண்டிருந்தார். இதுபற்றி தகவலறிந்து வந்த போலீசார் வாலிபரை மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் அவர் வழியிலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

விசாரணையில் இறந்தவர்கள் உதய்பூரைச் சேர்ந்த ஜன்னத் அக்தர் (வயது 26), ஷால்கரா பகுதியைச் சேர்ந்த ஷோஹேல் மியா என்பதும், இருவரும் காதலர்கள் என்பது தெரியவந்தது. இந்த ஜோடி தீவிரமாக காதலித்து வந்த நிலையில், அவர்களுடைய பெற்றோர் இருவருக்கும் வேறு இடத்தில் திருமண ஏற்பாடு செய்து வந்துள்ளனர். இதனால் ஏற்பட்ட விரக்தியில் ஜன்னத் அக்தர் காரில் காதலியை அழைத்து வந்து சுட்டுக்கொன்றுவிட்டு, தானும் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது. அங்கு கிடந்த துப்பாக்கியையும் போலீசார் கைப்பற்றினர்.

# டெல்லி கார் குண்டு வெடிப்பு வழக்கில் மேலும் ஒருவர் கைது

புதுடெல்லி, நவ.29

டெல்லியில் கடந்த 10ந்தேதி நடந்த கார் குண்டுவெடிப்பில் 15 பேர் பலியானார்கள். 30 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த வழக்கை முதலில் டெல்லி போலீசார் விசாரித்தனர். அப்போது பலரை அவர்கள் பிடித்து ரகசிய விசாரணை நடத்தினார்கள். இந்த நிலையில் இந்த வழக்கு தேசிய புலனாய்வு முகமைக்கு மாற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து புலனாய்வு அதிகாரிகள் தீவிர விசாரணையில் இறங்கினார்கள். இவர்கள் இந்த வழக்கில் முழு விவரங்களையும் கண்டுபிடித்தனர். சம்பவத்தில் டாக்டர் உமர் என்பவர் தற்கொலை குண்டாக வெடித்து சிதறியதையும் தெரிவித்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக உமரோடு தொடர்பில் இருந்த 6 பேரை தேசிய புலனாய்வு முகமையினர் கைது செய்திருந்தனர். இவர்கள் காவலில் விசாரிக்கப்பட்டு வருகிறார்கள். இந்தநிலையில் மேலும் ஒருவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். அவரது பெயர் சோயாப். அரியானா மாநிலத்தின் அல்பலா பல்கலைக்கழகம் அருகே உள்ள தவுஜ் பகுதியில் உமருக்கு இவர் ஒருநாள் அடைக்கலம் கொடுத்ததாக கூறப்படுகிறது. மேலும் தளவாட உதவிகளையும் வழங்கி உள்ளார். இதன்பேரில் புலனாய்வு அதிகாரிகள் அவரை கைது செய்து உள்ளனர்.

# இந்தோனேசியாவில் கனமழை, வெள்ளம்: பலி எண்ணிக்கை 174 ஆக உயர்வு



ஜகர்தா, நவ.29

ஆசியாவில் அமைந்துள்ள நாடு இந்தோனேசியா. இந்நாட்டின் வடக்கு சுமத்ரா, மேற்கு சுமத்ரா, அச்சோ ஆகிய மாகாணங்களில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது.

கனமழையால் பல்வேறு நகரங்களில் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் 2 லட்சத்திற்கு அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான வீடுகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. சாலை போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளதால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இந்தோனேசியாவில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 174 ஆக அதிகரித்துள்ளது. மேலும், 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 80 பேர் மாயமான நிலையில் அவர்களை தேடும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. அதேபோல், மீட்புப்பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. மீட்புப்பணியில் ராணுவம் களமிறக்கப்பட்டுள்ளது.

# சிரியாவில் இஸ்ரேல் தாக்குதல் 10 பேர் பலி

டமாஸ்கஸ், நவ.29

சிரியாவில் அதிபர் அல் அசாத் தலைமையிலான அரசு கடந்த ஆண்டு கவிழ்ந்தது. இதையடுத்து அந்நாட்டின் அதிபராக அகமது அல் ஷரா பொறுப்பேற்றுள்ளார்.

இதனிடையே, சிரியா மீது இஸ்ரேல் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது. மேலும், தெற்கு சிரியாவில் உள்ள ராணுவ கட்டமைப்புகள் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது. அசாத் ஆட்சி கவிழ்ந்தபோது சிரியாவில் ஐ.நா. கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை இஸ்ரேல் கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில், சிரியாவில் இன்று இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. அந்நாட்டின் ரைப் டிமாஷ்கியு மாகாணம் குவாண்டனா மாவட்டம் பெட் ஜின் கிராமத்தில் ஐஎஸ் பயங்கரவாதியை கைது செய்ய இஸ்ரேல் படையினர் முயன்றுள்ளனர். அப்போது, இஸ்ரேல் படையினருக்கும், உள்ளூர் ஆயுதக்குழுவினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் சிரியாவை சேர்ந்த 10 பேர் உயிரிழந்தனர். அதேவேளை, இஸ்ரேல் பாதுகாப்புப்படையினர் 6 பேர் காயமடைந்தனர்.

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள் தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு:9448699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM

# ஆன்லைன் கொள்முதல் தயாரிப்பு மோசடியால் ஏமாற வேண்டாம்: திருநெல்வேலி எஸ்.பி. அறிவுறுத்தல்

திருநெல்வேலி நவ.29

திருநெல்வேலி மாவட்ட காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தற்போது மொபைல் போன் மூலமாக Online purchase Product fraud (ஆன்லைன் கொள்முதல் தயாரிப்பு மோசடி) என்ற மோசடி மிக தீவிரமாக நடைபெற்று வருகிறது. பொருட்களின் தேவைகளுக்கு ஏற்ப தற்போது ஆன்லைன் மூலமாக பொருட்கள் வாங்கி வரும் வழக்கமாக இருந்து வரும் இந்த நேரத்தில் அதை மையமாக குறிவைத்து பல மோசடிகள் நடைபெற்று வருகிறது.

குறிப்பாக இவர்த்தக வியாபார தளத்தில் தேவைப்படும் பொருட்களை பதிவு செய்து வாங்கப்பட்டு வருகிறது. இதில் உங்களது கடைகளுக்கு அல்லது வீடுகளுக்கு தேவையான பொருட்களை வாங்குவதற்காக இவர்த்தக வியாபார தளத்தில் பதிவு செய்து அதில் இருக்கும் நிறுவனத்தின் தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டால்தன்னிடம் தாங்கள் பதிவு செய்த பொருட்கள் குறைந்த விலையில் இருக்கிறது என கூறுவார்.



மேலும் அந்த நபர் உண்மையாகவே நிறுவனம் வைத்து நடத்தி கொண்டு இருப்பது போன்று போலியாக ஒரு நிறுவனத்தின் பெயர் மற்றும் போட்டோக்களை செல்பேசி மூலமாக உங்களுக்கு அனுப்பி வைப்பார். பின்னர் அதை உண்மையென நம்பி அந்த நபரிடம் பொருட்களை ஆர்டர் செய்தால் அதற்காக Delivery charge உடன் மொத்த பணத்தையும் முன்னதாகவே செலுத்த வேண்டுமென கூறி உங்களிடம் அதிக அளவில் பணத்தை பெற்றுக் கொண்டு பொருட்களை அனுப்பாமல் ஏமாற்றிவிடுவார்.

எனவே இவர்த்தக வியாபார தளத்தைப் பயன்படுத்தி பொருட்கள் வாங்கும் போது வர்த்தக வியாபாரியிடம் உள்ள தனிபட்ட முறையில் ஆன்லைன் பணபரிவர்த்தனை மூலமாக (UPIApp) அல்லது வங்கி கணக்கின் மூலமாக பணத்தைச் செலுத்தாமல் இவர்த்தக வியாபார தளத்தில் உள்ள பணம் செலுத்தும் முறையில் பணத்தை செலுத்தினால், உறுதி செய்யப்பட்ட (Verified bank account) இவர்த்தக வியாபார தளம் உள்ளதால் பணம் திரும்ப கிடைக்க வாய்ப்பிருக்கிறது. மேலும் தனிப்பட்ட முறையில் யாரிடமும் பணத்தை அனுப்பி ஏமாற வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது.

இது போன்ற சைபர் கிரைம் நடைபெற்றால் சைபர் கிரைம் இணையதளத்தில் www.cybercrime.gov.in அல்லது 1930 என்ற Toll Free எண்ணிற்கு அழைத்து உடனடியாக உங்களுடைய புகாரினை பதிவு செய்யுமாறு திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகம் முழுவதும் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை? அரசு விளக்கம்

சென்னை நவ.29

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை கடலோரப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுவடைந்துள்ளது.

இந்த புயலுக்கு டிட்வா என பெயரிடப்பட்டுள்ளது. இந்த புயல் சென்னையில் இருந்து தெற்கில் சுமார் 500 கிலோமீட்டர் தொலைவில் மையம் கொண்டுள்ளது.

புயல் மணிக்கு 3 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து வருகிறது. டிட்வா புயல் காரணமாக பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. மேலும், பல மாவட்டங்களில் நாளை கனமழை பெய்யக்கூடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், டித்வா புயல் காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல்வேறு மாவட்டங்களுக்கு பள்ளி, கல்லூரிகளுக்கு நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டு வருகிறது.

அதேவேளை, புயல் , கனமழை தொடர்பாக நாளை பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிப்பது குறித்து அந்தந்த மாவட்ட நிர்வாகமே முடிவு எடுத்து அறிவிக்கும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

# பெண்கள் வாழத் தகுதியற்ற மாநிலமாக தமிழகத்தை மாற்றியதுதான் திமுக அரசின் சாதனை நயினார் நாகேந்திரன்



சென்னை, நவ.29

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் சதீஷ் என்பவர் அரிவாளைக் காட்டி மிரட்டி இளம்பெண் ஒருவரைக் காரில் கடத்த முயன்றதாக வெளியாகியுள்ள காணொளி நெஞ்சைப் பதைபதைக்க வைக்கிறது.

திமுக நிர்வாகியின் மகன் என்ற செல்வாக்கைப் பயன்படுத்தி சதீஷ் அப்பெண்ணைத் தனது ஆசைக்கு இணங்க அழைத்ததாகவும், இவர்கள் இருவருக்கும் ஏற்கனவே பழக்கம் இருந்து கருத்து வேறுபாடு காரணமாக அப்பெண் பிரிந்து விட்டதாகவும் பலவாறான தகவல்கள் வெளிவந்தாலும்கூட, பொதுவெளியில் பகிரங்கமாக ஒரு பெண்ணை ஆயுதம் காட்டி மிரட்டும் ஆணவத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இத்தகைய கொடூர மனப்போக்கு கடும் கண்டனத்திற்குரியது.

திமுகவினரின் கட்டளைகளை நிறைவேற்றும் கைக்கூலிகளாக காவல்துறையினர் மாறிவிட்டதன்விளைவுதான் திமுக ஆட்சியில் குற்றங்கள் கொடிகட்டிப் பறக்கின்றன. சுப்ரீம் கோர்ட்டே உத்தரவிட்ட பிறகும் கூட தமிழகக் காவல்துறைக்குத் தலைமையை நியமிக்க மறுக்கும் முதல்வரின் அலட்சியத்தால் தான் குற்றவாளிகள் எல்லாம் கொழுப்பெடுத்துப் போய்த் திரிகின்றனர்.

இப்படிப் பெண்கள் வாழத் தகுதியற்ற மாநிலமாகவும் குற்றவாளிகளின் கூடாரமாகவும் தமிழகத்தை மாற்றியதுதான் திமுக அரசின் முக்கிய சாதனை. இப்பேற்பட்ட ஒரு கேடுகெட்ட ஆட்சி வரும் சட்டமன்றத் தேர்தலில் ஒழித்துக் கட்டப்பட வேண்டும்! பெண்களின் பாதுகாப்பும் மக்களின் நிம்மதியும் சமூகத்தின் அமைதியும் தமிழகத்தில் நிலைநாட்டப்பட வேண்டும்!

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# 'சென்னை ஒன்' செயலி மூலம் ரூ.1,000, ரூ.2000 மாதாந்திர மின்னணு பயண அட்டை பெறும் வசதி தொடங்கப்பட்டுள்ளது

சென்னை, நவ.29

சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் மற்றும் சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பு (கும்டா) இணைந்து வழங்கும் 'சென்னை ஒன்' செயலி மூலம் விருப்பம் போல் பயணம் செய்யும் ஆயிரம் ரூபாய் மற்றும் 2 ஆயிரம் ரூபாய் மின்னணு மாதாந்திர பயண அட்டை பெறும் வசதியை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சிவசங்கர் அறிமுகம் செய்து வைத்தார்.

இதுவரை மாநகர போக்குவரத்துக் கழக முக்கிய பஸ் நிலையங்களில் மாதாந்திர பயணச்சீட்டு மையங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வந்த இந்த பயண அட்டைகளை 'சென்னை ஒன்' செயலி வாயிலாக

எங்கும், எப்போதும் செல்போனில் எளிதாக பெறக்கூடிய மின்னணு பயண அட்டைகளாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த மின்னணு பயண அட்டைகள் வாங்கிய நாளில் இருந்து தொடர்ந்து 30 நாட்களுக்கு செல்லுபடியாகும். இது முழுக்க, முழுக்க பணமில்லா பரிவர்த்தனை முறையில் இயங்குவதால் யு.பி.ஐ. அல்லது டெபிட், கிரெடிட் கார்டுகள் மூலம் பயண அட்டையை பெறும் வசதி உள்ளது.

# தூத்துக்குடியில் மகனை கத்தியால் குத்திய தந்தை கைது

தூத்துக்குடி நவ.29

தூத்துக்குடி அண்ணாநகர் 3வது தெருவைச் சேர்ந்த துரைப்பாண்டி மகன் இசக்கிபாண்டி (வயது 42). இவரது மனைவி பரமேஸ்வரி. இந்த தம்பதிகளுக்கு சந்தோஷ்(17) என்ற மகனும் 2 மகள்களும் உள்ளனர். குடும்பத்தகராறு காரணமாக பரமேஸ்வரி கணவரை பிரிந்து, கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு தனது குழந்தைளுடன் முத்தையாபுரம் காந்தி நகர் 3வது தெருவில் வசித்து வருகிறார்.



இந்த நிலையில் நேற்று இரவு இசக்கிபாண்டி அவரது வீட்டுக்கு சென்று மனைவியிடம் என்னுடன் குடும்பம் நடத்த வா, இல்லை என்றால் உன்னை கத்தியால் குத்தி கொலை செய்து விடுவேன் என்று மிரட்டி, கத்தியால் குத்த முயன்றார். அப்போது அவரை தடுக்க முயன்ற அவரது மகனுக்கு கையில் கத்தி குத்தியதால் காயம் ஏற்பட்டது.

இதில் காயம் அடைந்த சந்தோஷ் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இந்த சம்பவம் குறித்த புகாரின் பேரில்,

முத்தையாபுரம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் (பொறுப்பு) சண்முககுமாரி வழக்குப்பதிவு செய்து இசக்கிபாண்டியை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# தூத்துக்குடியில் கல்வி கடன் முகாம்: கலெக்டர் தகவல்

தூத்துக்குடி நவ.29

தூத்துக்குடி மாவட்டத்தில் உயர்கல்வி படிப்பதற்கு பொருளாதாரம் தடையாக இருக்கும் மாணவ/ மாணவியர்கள் உயர்கல்வி பயின்று வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவதற்காக மாவட்ட நிர்வாகம் வங்கியாளர்களை ஒருங்கிணைத்து கல்வி கடன் வழங்கும் முகாம் இன்று (28.11.2025) காலை 10 மணிக்கு சுப்பையா வித்யாலயம் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற உள்ளது.

20242025ம் கல்வி யாண்டில் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று இன்ஜினியரிங், மருத்துவம், வேளாண்மை உள்ளிட்ட உயர்கல்வி பாடப்பிரிவுகளில் இந்த கல்வி ஆண்டில் சேர்ந்திருக்கும் மாணவ, மாணவியர் மற்றும் ஏற்கனவே கல்லூரிகளில் படித்து வரும் மாணவர்கள்இதில்கலந்து கொள்ளலாம்.

மாணவர்கள் கல்வி கடனைப்பெறவிண்ணப்பிக்க தேவையான ஆவணங்களுடன் வருமாறு மாவட்ட கலெக்டர் கேட்டுக் கொண்டுள்ளார். மாணவர்கள் பான் கார்டு, ஆதார் அட்டை, வங்கி கணக்கு பாஸ் புக், சமீபத்திய பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம், 10ம் வகுப்பு, +1, +2 மதிப்பெண் சான்றிதழ்கள், மாற்றுச் சான்றிதழ், சாதி சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ் (தேவையுள்ளவர்களுக்கு), உறுதிமொழி சான்றிதழ் (Bonafide Certificate), கல்லூரி கட்டண விவரம் மற்றும் செலுத்திய கட்டண ரசீதுகளை கொண்டு வர வேண்டும்.

இதேபோல இணை விண்ணப்பதாரராக வரும் பெற்றோர் அவர்களது பான் கார்டு, ஆதார் அட்டை, புகைப்படம், வங்கி கணக்கு பாஸ் புக் மற்றும் வருமானச் சான்றிதழை கொண்டு வர வேண்டும். மேலும் மாணவர்கள் https://pmvidyalaxmi.co.in/ என்ற இணையத்தளத்திலும் கல்வி கடனுக்காக பதிவு செய்து கொள்ளலாம்.

மத்திய/ மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பயில்பவர்கள் கற்பிப்பு கட்டணம், சிறப்பு கட்டணம், விடுதி கட்டணம், பேருந்து கட்டணம் போன்ற கட்டணங்களை இந்த கல்வி கடன் மூலம் பெறலாம். இந்த கல்வி கடன் முகாம், மாணவர்களின் உயர்கல்விக்கான கனவை நிறைவேற்றுவதில் சிறந்த வாய்ப்பாக அமையும் என மாவட்ட கலெக்டர் இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

# தூத்துக்குடி ஷிப்பிங் நிறுவனத்தில் கன்டெய்னரில் தீவிபத்து

தூத்துக்குடி நவ.29

தூத்துக்குடி அருகே தட்டப்பாறை விலக்கு, செந்திலாம் பண்ணையில் தனியார்ஷிப்பிங்நிறுவனத்தில் இருந்த கன்டெய்னரில் இருந்து புகை வருவதாக சிப்காட் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் கிடைத்தது. இதனையடுத்து நிலைய அலுவலர் கார்த்திகேயன் தலைமையில் தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று கன்டெய்னரை திறந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

மேலும் மாவட்ட அலுவலர் கணேசன் அறிவுரையின்படி கன்டெய்னரில் இருந்த பஞ்சு பேல்கள் வெளியே எடுக்கப்பட்டு பல மணி நேரம் போராடி தீ முற்றிலும் அணைக்கப்பட்டது. இதனால் தீ மேலும் பரவாமல் தவிர்க்கப்பட்டது. இதனையடுத்து தீவிபத்து குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர். இந்த திடீர் தீவிபத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



# அரசியல் கட்சிகளின் ரோடு ஷோ வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பான வழக்கு ஐகோர்ட்டில் விசாரணை ஒத்திவைப்பு

சென்னை, நவ.29

அரசியல் கட்சிகளின் கூட்டங்கள், ரோடு ஷோக்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்க வேண்டும் என சென்னை ஐகோர்ட்டில் பொதுநல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. கடந்த முறை இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது தமிழக அரசு தரப்பில் வரைவு வழிகாட்டு நெறிமுறைகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த நிலையில், இந்த வழக்கு இன்று தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது அ.தி.மு.க., த.வெ.க. மற்றும் தேசிய மக்கள் சக்தி கட்சி சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், இந்த வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாக தங்கள் கட்சிகளின் சார்பில் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், வரைவு வழிகாட்டுநெறிமுறைகளை வகுக்கும் முன்பு தங்கள் கட்சிகளை தமிழக அரசு கலந்தாலோசிக்கவில்லை என்றும் புகார் தெரிவித்தனர்.



அ.தி.மு.க. தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், மத வழிபாட்டுத் தளங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கும் இது போல் வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க வேண்டும், கூட்டங்களுக்கு அனுமதி மறுக்கும்போது அதற்கான காரணங்களை தெரிவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளை தெரிவித்தார்.

த.வெ.க. தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், கூட்டங்கள், ரோடு ஷோக்களை நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட இடங்கள் தொடர்பான விவரங்களை இணையதளத்தில் வெளியிட வேண்டும், அங்கு எத்தனை பேர் நிற்கலாம், எத்தனை பேர் உட்காரலாம் என்பன உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் அதில் குறிப்பிட வேண்டும் என வலியுறுத்தினார்.

இதையடுத்து தமிழக அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி, அனைத்து கட்சிகளையும் கலந்து ஆலோசித்த பிறகுதான் வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளதாகவும், கூட்டங்கள், ரோடு ஷோக்களை நடத்த அனுமதிக்கப்பட்ட இடங்கள் குறித்து இணையத்தில் தகவல்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் விளக்கமளித்தார்.

அனைத்து வாதங்களையும்பதிவுசெய்துகொண்ட நீதிபதி, "தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பார்க்கும்போது, ரோடு ஷோக்களுக்கு அனுமதி பெறுவது தேர்வு எழுதி வெற்றி பெறுவது போல் இருக்கிறது. விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டதா, அல்லது நிராகரிக்கப்பட்டதா என்பதை முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

மேலும் வழிகாட்டு நெறிமுறைகளில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு பிரிவும் அடிப்படை உரிமைகளை மீறக்கூடிய வகையில் இருப்பதாக கூறி வழக்கு தொடரக்கூடிய நிலையில் உள்ளது என்று குறிப்பிட்ட நீதிபதி, வழக்கின் விசாரணையை நாளைய தினத்திற்கு ஒத்திவைத்தார்.

# அதிக அளவில் முதலீடு: கோவை கிழக்குப்பகுதியில் தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பு அதிகரிப்பு

கோவை, நவ.30

கோவையின் தொழில் வளர்ச்சிக்காக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் 158 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. மொத்தம், 43,844 கோடி ரூபாய் முதலீட்டில் ஒரு லட்சம்பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் இந்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.




உயர்தர பம்புகள் மற்றும் மோட்டார் உற்பத்தித் தொழில் மேம்பாட்டிற்காக, ஆவாரம்பாளையத்தில் 14.43 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், வார்ப்புகள் மற்றும் உலோக வடிவமைப்பு மேம்பாட்டிற்காக, மோப்பிரிப்பாளையத்தில், 26.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், திறன்மிகு மையங்கள் அமைப்பதற்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களும் முதலீடுகள் செய்ய ஒப்பந்தம் செய்துள்ளன. ஜவுளி, வான்வெளி மற்றும் பாதுகாப்பு, மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், பொது உற்பத்தி மற்றும் சுற்றுலா துறைகளில் மேற்கொள்ளப்பட உள்ளன. கோவை அருகே உள்ள மோப்பிரிப்பாளையத்தில், வார்ப்புகள் மற்றும் உலோக வடிவமைப்பு மேம்பாட்டிற்காக 26.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒரு திறன்மிகு மையம் நிறுவப்பட உள்ளது.

சூலூரில் கோவையை சேர்ந்த ஜெப்டோ லாஜிக் டெக்னாலஜி நிறுவனம் செமிகண்டக்டர் எலெக்ட்ரானிக் தொழிற்சாலையை ரூ.250 கோடியில் அமைக்க உள்ளது. கரவளி மாதப்பூர் பகுதியில் லாஜிஸ்டிக் பார்க் (தளவாட பூங்கா) அமைக்கப்பட உள்ளது. இதுதவிர பல்வேறு ஐ.டி. நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் தங்களது முதலீடுகளை கோவையில் செய்ய தொடங்குகிறது.

உள்ளூரை சேர்ந்த முதலீட்டாளர்கள்அதிக அளவில் முதலீடு செய்வது கோவை நகரம் குறிப்பாக கிழக்குப்பகுதியில் தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக தொழில் துறை வல்லுனர்கள் கூறுகின்றனர்.

# சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தவருக்கு 23 ஆண்டுகள் சிறை தண்டனை போக்சோ கோர்ட்டு தீர்ப்பு

சென்னை நவ.29

சென்னை நெற்குன்றம் கிருஷ்ணாநகர் பகுதியைச் சேர்ந்தவர் சுபாஷ் சந்திரதாஸ் (54 வயது). கடந்த 2023ம் ஆண்டு 5 வயது சிறுமியை கடத்தி சென்று பாலியல் தொந்தரவு கொடுத்ததாக சுபாஷ் சந்திரதாஸை கோயம்பேடு அனைத்து மகளிர் போலீசார் கைது செய்தனர்.

இந்த வழக்கு விசாரணைசென்னைபோக்சோ சிறப்பு கோர்ட்டில் நீதிபதி பத்மா முன்னிலையில் நடந்தது. வழக்கை விசாரித்த கோர்ட்டு, சுபாஷ் சந்திரதாஸ் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக கூறி அவருக்கு பாலியல் குற்றச்சாட்டின் கீழ் 20 ஆண்டுகள் சிறை தண்டனையும், கடத்தல் குற்றச்சாட்டின் கீழ் 3 ஆண்டுகள் சிறை தண்டனையும் விதித்து உத்தரவிட்டது.




இந்த தண்டனையை ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தமிழக அரசு இழப்பீடாக ரூ.1 லட்சம் வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பு கூறப்பட்டது.

# நெல்லையில் ஆன்லைன் பண மோசடி: கேரள வாலிபர் குண்டர் சட்டத்தில் கைது

திருநெல்வேலி நவ.29

கேரள மாநிலம், மலப்புரம் மாவட்டம், எடப்பட்டா, எப்பிகாட்டைச் சேர்ந்த அஷ்ரப் மகன் ஆசிக் (வயது 27) என்பவர் கணினிவெளிச் சட்டக்குற்றவாளி ஆவார். இவர் திருநெல்வேலி மாநகரில், ஆன்லைன் முதலீடு செய்து அதிக பணம் சம்பாதிக்கலாம் என பொது மக்களை நம்பச் செய்து போலியான வங்கி கணக்குகளில் பணத்தை செலுத்த ஆசையை தூண்டி, ஆன்லைன் மோசடி செய்து பொது மக்களிடம் பணத்தை ஏமாற்றும் செயலில் ஈடுபடுவதன் மூலம் பொது ஒழுங்கு பராமரிப்பிற்கு குந்தகம் விளைவித்து வந்தார்.

இதனையடுத்து திருநெல்வேலி மாநகர துணை போலீஸ் கமிஷனர் (மேற்கு) பிரசண்ணகுமார், போலீஸ் உதவி கமிஷனர் (பொறுப்பு) செந்தாமரைக்கண்ணன், சைபர் கிரைம் போலீஸ் இன்ஸ்பெக்டர் சண்முகவடிவு ஆகியோரின் பரிந்துரையின் பேரில், திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹாதிமணி உத்தரவுப்படி ஆசிக் நேற்று குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் தடுப்புக்காவலில் அடைக்கப்பட்டார்.



# பாஜகவின் ஸ்லீப்பர் செல் செங்கோட்டையன் அமைச்சர் கடும் தாக்கு

புதுக்கோட்டை, நவ.29

தமிழக இயற்கைவளம், நீதிமன்றம் மற்றும் சிறைதுறை அமைச்சர் ரகுபதி புதுக்கோட்டையில் நிருபர்களிடம் கூறியதாவது:

முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் “பா.ஜ.க.வின் ஸ்லீப்பர் செல்”. நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்தில் சேர ஒரு குறிப்பிட்ட பணிக்காக அனுப்பப்பட்டவர். நீண்டகாலம்அ.தி.மு.க.வுடன் இணைந்து பணியாற்றிய செங்கோட்டையன், பா.ஜ.க.வால் தொலைவில் இருந்து கட்டுப்படுத்தப்படுகிறார். செங்கோட்டையனை நான் பா.ஜ.க.வின் ஸ்லீப்பர் செல்லாகவே பார்க்கிறேன். இது விரைவில் நிருபிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து அவரிடம் நிருபர்கள், "அவரை பா.ஜ.க. ஏமாற்றியதால் தமிழக வெற்றிக் கழகத்தில் சென்று சேர்ந்தாரா?" என்று எழுப்பிய கேள்விக்கு, “பா.ஜ.க. அவரை ஏமாற்றியிருந்தால் அவர் சென்றிருக்கமாட்டார்,” என்று பதில் அளித்தார்.

தொடர்ந்து அவர் கூறும்போது, "செங்கோட்டையன் பா.ஜ.க.வின் ஸ்லீப்பர் செல். பா.ஜ.க. தலைவர் மற்றும் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவின் ஆணையை மட்டுமே கேட்பவர். அவர் தொலைவில் இருந்து இயக்கப்படுகிறார். தமிழக வெற்றிக் கழகத்தை பா.ஜ.க. கூட்டணிக்குள் கொண்டு வருவதற்கான பா.ஜ.க கொடுத்த பணியை நிறைவேற்றவே செங்கோட்டையன் தமிழக வெற்றிக் கழகத்தில் சேர்ந்துள்ளார்” என்றார்.



மேலும், நிருபர்கள் அவரிடம், "அமைச்சர் பி.கே. சேகர்பாபு, செங்கோட்டையனை தி.மு.க.வில் சேர அழைத்தது குறித்து கேள்வி எழுப்பினர். அதற்கு அவர், "ஒரு கட்சியை விட்டு வெளியேறியவரை அழைப்பது இயல்பானதே. நண்பர்கள் என்ற முறையில் அழைத்திருக்கலாம்.

ஆனால் அவர் வரவில்லை, ஏனெனில் அவர் ஸ்லீப்பர் செல்” என்றார்.

# எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, விஜய் படங்களுடன் தனது அலுவலகத்தில் பேனர் வைத்த செங்கோட்டையன்

சென்னை, நவ.29

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் செங்கோட்டைன் கடந்த சில நாட்களாக தவெகவில் இணைய இருப்பதாக தகவல்கள் வெளிவந்தன. இதை உறுதிப்படுத்தும் வகையில் செங்கோட்டையன் நேற்று முன்தினம் தலைமை செயலகம் வந்து சபாநாயகரிடம் தனது ராஜினாமா கடிதம் கொடுத்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

தொடர்ந்து த.வெ.க. தலைவர் விஜய்யை சந்தித்து ஆலோசனை நடத்தினார். இதனை தொடர்ந்து நேற்று செங்கோட்டைன் விஜய் முன்னிலையில் நேற்று தமிழக வெற்றிக் கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். அவருடன் முன்னாள் எம்.பி. சத்யபாமா, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள், வெங்கடாசலம், முத்துக்கிருஷ்ணன் உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட ஆதரவாளர்களும் த.வெ.க.வில் இணைந்தனர். அவர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டைகளை விஜய் வழங்கினார்.



இந்தநிலையில், ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையம் கரட்டூர் பகுதியில் உள்ள முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் அலுவலகம் முன்பு வைத்திருந்த பிளக்ஸ் போர்டு புதிதாக மாற்றப்பட்டுள்ளது. மறைந்த முன்னாள் முதல் அமைச்சர்கள் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா படங்களுடன் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் இருப்பது போன்ற பிளக்ஸ் போர்டு வைக்கப்பட்டுள்ளது. அதில் தவெக கொள்கை தலைவர்கள் படங்களும், ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற வாசகமும் இடம்பெற்றுள்ளது. மேலும் செங்கோட்டையன் தனது காரின் முன்பகுதியிலும்தவெககொடியை வைத்துள்ளார்.

நேற்று செங்கோட்டையன் செய்தியாளர்கள் சந்திப்பின்போது “தவெக ஜனநாயக கட்சி. யார் வேண்டுமானாலும், தங்களுக்கு விருப்பப்பட்டவர்களுடைய படத்தை சட்டைப் பையில் வைத்துக் கொள்வதற்கு ஆட்சேபனை கிடையாது. சட்டை பையில் நான் வைத்திருக்கும் ஜெயலலிதா படத்தை மாற்றிவிட்டால், த.வெ.க.வில் இணைந்ததும், இன்றே படத்தை மாற்றிவிட்டீர்களா? என கேட்பீர்கள்” என்று கூறியது குறிப்பிடத்தக்கது.

# டிட்வா புயல் முன்னெச்சரிக்கை : முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை

சென்னை, நவ.29

‘டிட்வா’ புயல் தென் மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனையொட்டிய இலங்கை கடலோரப்பகுதிகளில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று நேற்று புயலாக வலுவடைந்து இருப்பதாக சென்னைவானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. இந்த புயலுக்கு ‘டிட்வா’ என பெயரிடப்பட்டு உள்ளது. ஏமன் நாடு இந்த பெயரை பரிந்துரைத்து இருக்கிறது.

டிட்வா புயல் தற்போது தற்போது 10 கி.மீ வேகத்தில் வடக்கு வடமேற்கு திசையில் நகர்ந்து வருகிறது. இது வருகிற 30ந்தேதி அதிகாலை வடதமிழகம், புதுச்சேரி மற்றும் அதனையொட்டிய தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென் மேற்கு வங்கக்கடல் பகுதியை அடையக்கூடும் என ஆய்வு மையம் கணித்துள்ளது. வங்கக்கடலில் உருவாகியுள்ள இந்த புயலால் தமிழ்நாட்டுக்கு மழைக்கான வாய்ப்பு அதிகம் இருப்பதாகவே கணிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் தென் மாவட்டங்கள், காவிரி டெல்டா மாவட்டங்கள், வட கடலோர மாவட்டங்களில் நல்ல மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந்த நிலையில், ‘டிட்வா’ புயல் முன்னெச்சரிக்கை நவடிக்கைகள் தொடர்பாக மாவட்ட கலெக்டர்களுடன் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை மேற்கொண்டார். மேலும் சென்னை எழிலகத்தில் செயல்படும் கட்டுப்பாட்டு மையத்தில் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து செய்தியாளர்ளுக்கு பேட்டி அளித்த மு.க.ஸ்டாலின் கூறியதாவது,

அதிக மழை பெய்யும் எனக் கூறியிருக்கிறார்கள். போதிய மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது . தலைமைச் செயலர் முன்னிலையில் உயரதிகாரிகள் கூட்டம் கூட்டி முன்னெச்சரிக்கை நவடிக்கைகள் தொடர்பாக அறிவுறுத்தல் தரப்பட்டுள்ளது. என தெரிவித்தார்.

# அடுத்து தவெகவில் இணையப்போகும் அதிமுக தலைவர்கள் யார்..? செங்கோட்டையன் பதில்

சென்னை, நவ.29

சென்னையில் செய்தியாளர்கள் சந்திப்பில் தவெக மாநில நிர்வாகக்குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் பேசியதாவது:

மக்களின் ஆதரவுடன் 2026ல் ஆட்சிப் பீடத்தில் விஜய் அமர்வார். புதியவர்கள் ஆள வேண்டும் என்ற எண்ணம் மக்களிடையே எழுந்துள்ளது. ஆட்சி மாற்றம் நிகழ விஜய்க்கு உதவுவேன். அதிமுகவில் இருந்து மேலும் சிலர் வருவது குறித்து இப்போதைக்கு தெரிவிக்க முடியாது.



சொன்னால் பிரச்சினை வரும். ஆட்சி மாற்றத்தை உருவாக்கி விஜய் தலைமையில் தமிழகம் வெற்றி நடை போடுவதற்கு அயராது உழைப்பேன்.

இவ்வாறு அவர் கூறினார்

# சொந்த தொழில்முனைவோரை ஏன் கொண்டாடக்கூடாது? அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கேள்வி

சென்னை, நவ.29

தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தனது எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:

கோயம்புத்தூரில் நடைபெற்ற தொழில் மாநாட்டுக்கு பின்பு, இரண்டாவது தலைமுறை தொழில்முனைவோர் ஒருவர் எங்களுடன் பேசிய போது, "உணவு துறை தமிழ்நாட்டில் மிகப்பெரிய வேலைவாய்ப்பு உருவாக்கும் துறைகளில் ஒன்றாக இருக்கிறது. அதை விரிவாக்குவதற்கு துல்லியம், முதலீடு மற்றும் ஒழுங்குத்தன்மை தேவைப்படுவதையும் இத்தகைய சவால்களை மிக சில துறைகள் மட்டுமே சந்திக்கின்றன" என்றும் கூறினார். இருந்தும், பலர் இதை “சவாலான” வணிகம் என எடுத்துக் கொள்ளவில்லை. அந்த எண்ணத்தை மாற்றவே அவர்கள் விரும்புகின்றனர்.

அவர்கள் அதிக முதலீடு, திறமையான மனித வளம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றை உலகளாவிய வளர்ச்சிக்காகத் தேவைப்படுகின்றன. உணவு துறை ஒரு உண்மையான பொருளாதார இயந்திரம் என்பதை அங்கீகரிக்க வேண்டும்.

ஆனால், அதே நேரத்தில், தமிழ்நாட்டின் மிகவும் நேசிக்கப்படும் உணவு நிறுவனங்களையே சிலர் கேள்வி கேட்டு இகழ்கின்றனர். இது நம்முடைய சொந்த தொழில்முனைவோருக்கு செய்யப்படும் மிகப்பெரிய அவமதிப்பாகும்.

இந்த ஒப்பந்தங்கள் சிறிய சமையலறைகள் அல்லது கடைகளுக்கானவை அல்ல. தொழிற்துறை அளவிலான உணவு உற்பத்தி, குளிர்ப்பு சங்கிலிகள், ஏற்றுமதி, உலகளாவியசில்லறைவிரிவாக்கம் மற்றும் ஆயிரக்கணக்கான புதிய வேலைவாய்ப்புகளுக்கானவை.

இத்தகையதுணிச்சலான மாற்றத்தை ஏற்படுத்திவரும் முன்னோடிகளை ஆதரிக்கும் திராவிட மாடல் அரசை நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். அன்னபூர்ணா அல்லது ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்சை உணவகங்களாக நாம் தெரிந்திருக்கிறோம் என்பதாலேயே அவர்கள் செயல்படும் அளவும் அதுவே என்று அர்த்தமில்லை. இவை அனைத்தும் முழுமையான உணவு செயலாக்க நிறுவனங்கள். நவீன உட்கட்டமைப்புடன், சர்வதேச வழங்கல் சங்கிலிகளை உருவாக்கும் ஆக்கபூர்வமான நோக்கத்துடன் செயல்படுகின்றன.

இங்கே ஒரு கேள்வியை கேட்டுப் பாருங்கள். நம்முடைய சொந்த தொழில் முனைவோரை நாம் ஏன் கொண்டாடக்கூடாது?



ஊக்குவிப்புகள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மட்டுமேதானா?. அமெரிக்கா அல்லது ஐரோப்பிய நிறுவனங்களை தமிழ்நாடு திறன் வளர்க்க உதவுமானால், பல தசாப்தங்களாக வேலைவாய்ப்புகளை உருவாக்கி,நம்பிக்கையை கட்டி, உள்ளூர் பொருளாதாரங்களை தாங்கி வரும் நம்முடையவர்களுக்கு ஆதரிக்கக்கூடாதா?

நமக்கு உணவு அளிப்பவர்கள், நம்மைத் தான் வேலைக்கு அமர்த்துபவர்கள், தமிழ்நாட்டின் அடையாளத்தை உலகம் முழுவதும் எடுத்துச் செல்லுபவர்கள், இவ்வூர் நிறுவனங்கள்தான். அவர்கள் ஒற்றைச் சாளர வசதிக்கு தகுதியானவர்கள், அவர்கள் ஏற்றுமதி ஆதரவுக்கு தகுதியானவர்கள், அவர்கள் பெரிய கனவுகளைக் காண தகுதியானவர்கள்.

அவர்களை தாக்கி பேசுவது அவர்கள் செய்த உழைப்பை அவமதிப்பதே. அவர்களின் பின்னால் நிற்பது வலுவான தமிழ்நாட்டை உருவாக்குவதே. உங்களுடையவர்களை ஆதரியுங்கள். முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு அதை செய்யும். எங்கள் உணவு துறையை முழுமையாக ஆதரிக்க மேலும் முயற்சிகள் வரும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கார்த்திகை அகல் விளக்கு விற்பனை விறுவிறுப்பு

தூத்துக்குடி நவ.29

ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் திருக்கார்த்திகை விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அன்றைய தினம் இரவில், வீடுகள் தோறும் அகல்விளக்கு தீபம் ஏற்றுவதும், கொழுக்கட்டை தயார் செய்து வழிபடுவதும் வழக்கம் ஆகும். இந்த ஆண்டுக்கான திருக்கார்த்திகை விழா வருகிற 3ந் தேதி (3.12.2025) கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு தீபம் ஏற்றுவதற்கான அகல்விளக்குகளை மக்கள் அதிக அளவில் வாங்கி செல்கின்றனர்.



தூத்துக்குடி மாவட்டம் ஏரல் வாழவல்லான் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அதிக அளவில் அகல்விளக்குகள் தயாரிக்கப்பட்டு தூத்துக்குடிக்கு கொண்டு வந்து கடைகளில் குவித்து வைத்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கிளிக்கூண்டு விளக்கு, தானேவிளக்கு, குபேர விளக்கு உள்ளிட்ட விதவிதமான விளக்குகள் விற்பனைக்கு குவித்து வைக்கப்பட்டு உள்ளன. ரூ.10 முதல் ரூ.150 வரை விதவிதமான விளக்குகள் விற்பனை செய்யப்படுகிறது. இதனை மக்கள் ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர்.

# திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா: நாக வாகனத்தில் சந்திரசேகரர் வீதிஉலா

திருவண்ணாமலை நவ.29

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 24ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவின் 4ம் நாளான நேற்று காலை 10 மணி அளவில் வெள்ளி மூஷிக வாகனத்தில் விநாயகரும், நாக வாகனத்தில் அம்பாளுடன் சந்திரசேகரரும் சிறப்பு அலங்காரத்தில் அருணாசலேஸ்வரர் கோவில் ராஜகோபுரம் எதிரே உள்ள 16 கால் மண்டபத்தில் எழுந்தருளினர்.

இதைத்தொடர்ந்து சாமிக்கு சிறப்பு பூஜைகள் நடந்தது. இதில் திரளான பக்தர்கள்கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து மேள தாளங்கள் முழங்க விநாயகரும்,



அதன் பின்னர் நாக வாகனத்தில் சந்திரசேகரரும் கோவில் மாடவீதிகளை சுற்றி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். மாடவீதிகளில் பக்தர்கள் தங்களின் வீடுகளின் அருகே சாமி வந்ததும் தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றி வழிபட்டனர்.

இரவு 10 மணியளவில் நடைபெற்ற உற்சவத்தில் பஞ்சமூர்த்திகளான விநாயகர், வள்ளி, தெய்வானையுடன் முருகர், உண்ணாமலை அம்மன் சமேத அருணாசலேஸ்வரர், பராசக்தி அம்மன், சண்டிகேஸ்வரர் ஆகிய சாமிகள் வெள்ளி கற்பக விருட்சம், காமதேனு வாகனம் மற்றும் இதர வெள்ளி வாகனங்களில் எழுந்தருளி கோவில் மாடவீதிகளை சுற்றி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். மேலும் கோவில் கலையரங்கத்தில் பரதநாட்டியம், நாட்டுப்புற கலை நிகழ்ச்சி, பக்தி சொற்பொழிவு உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

தீபத்திருவிழாவின் போது சாமி வெள்ளி பெரிய ரிஷப வாகனத்திலும், வெள்ளி ரதத்திலும் எழுந்தருளி மாடவீதி உலா வருவது முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். அதன்படி இன்று (வெள்ளிக்கிழமை) இரவுசாமி வெள்ளி பெரிய ரிஷப வாகனத்தில் எழுந்தருளுகிறார். தொடர்ந்து நாளை (சனிக்கிழமை) இரவு வெள்ளி ரதத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி அளிக்கிறார். நாளை மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) பஞ்சமூர்த்திகள் தேரோட்டம் நடைபெற உள்ளது.

# மதுரை ஐகோர்ட்டில் துப்பாக்கியால் சுட்டு போலீஸ்காரர் தற்கொலை.. என்ன காரணம்..?

மதுரை நவ.29

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே உள்ள எழுமலை கோட்டைப்பட்டியைச் சேர்ந்தவர் மாணிக்கம். இவருடைய மனைவி பொட்டியம்மாள். இவர்களுடைய இளைய மகன் மகாலிங்கம் (வயது 30). இவர், கடந்த 2022ம் ஆண்டில் தமிழ்நாடு சிறப்பு காவல்படையின் ராஜபாளையம் பட்டாலியனில், போலீஸ்காரராக சேர்ந்தார். தற்போது மதுரை ஆயுதப்படையில் பணியாற்றினார். மதுரை ஐகோர்ட்டில் இரவு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்தார்.

நேற்று முன்தினம் நள்ளிரவில் மகாலிங்கம் உள்ளிட்ட ஆயுதப்படை போலீஸ்காரர்கள் ஐகோர்ட்டுபிரதானவாசல் பகுதியில் எஸ்.எல்.ஆர். வகை துப்பாக்கிகளை ஏந்தி பாதுகாப்பு பணியில் இருந்தனர். நேற்று அதிகாலை 3 மணி அளவில் மகாலிங்கம், துப்பாக்கியை ஏந்தியபடி அங்கும் இங்குமாக நடந்து கொண்டிருந்தார்.



இதைப் பார்த்த மற்ற போலீஸ்காரர்கள், அதிக குளிராக இருப்பதால் அவர் அவ்வாறு நடந்து உடலை சூடேற்றிக் கொண்டு இருப்பதாக கருதினர். சற்று நேரத்தில் ஒரு கட்டிடத்தில் அவர், திடீரென தன் நெஞ்சில் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு ரத்த வெள்ளத்தில் சாய்ந்தார். துப்பாக்கி வெடித்த சத்தம் கேட்டு அதிர்ச்சி அடைந்த சக போலீசார் ஓடிவந்து பார்த்தனர். மகாலிங்கம் ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடினார்.

இதுகுறித்து உடனடியாக உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். மகாலிங்கத்தை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள், ஏற்கனவே அவர் இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து அறிந்ததும் மாநகர போலீஸ் துணை கமிஷனர் அனிதா உள்ளிட்ட அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். பின்னர் அவரது உடல் பரிசோதனைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்த சம்பவம் குறித்து மதுரை ஐகோர்ட்டு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். சம்பவத்துக்கான காரணம் தொடர்பாக போலீசார் தரப்பில் கூறும்போது, மகாலிங்கம் தனக்கு திருமணம் ஆகவில்லை என்ற மன வருத்தத்தில் இருந்ததாககூறப்படுகிறது. இதன் காரணமாக அவர் தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது வேறு ஏதேனும் காரணம் உள்ளதா? என விசாரித்து வருவதாக கூறினர்.

இதற்கிடையே மகாலிங்கம் எழுதிவைத்த கடிதம் சிக்கி இருப்பதாகவும், அதில் தனது தற்கொலைக்கு யாரும் காரணமில்லை என எழுதப்பட்டு இருப்பதாகவும் போலீசார் தரப்பில் கூறப்படுகிறது. மகாலிங்கத்தின் மூத்த அண்ணன், காவல் துறையில் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. மதுரை அரசு ஆஸ்பத்திரி முன்பாக மகாலிங்கத்தின் குடும்பத்தினர், உறவினர்கள் திரண்டனர். அவரது உடலைப்பார்த்து அவர்கள் கதறி அழுதது மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியது.

# எந்த தொழிலும் செய்யாதபோதிலும் ரூ.9.48 கோடி ஜி.எஸ்.டி... வங்கி கணக்கு முடக்கம்... நூதன மோசடியால் பெண் அதிர்ச்சி!

திருச்சி நவ.29

திருச்சி மன்னார்புரம் காஜாநகர் குடிசை பகுதியை சேர்ந்தவர் சிவா. இவரது மனைவி கலைவாணி (வயது 35). கலைவாணி பெயரில் திருச்சி பகுதியில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் சேமிப்பு கணக்கு உள்ளது. தற்போது அவர் அந்த வங்கியின் ஏ.டி.எம். கார்டை பயன்படுத்தி பணம் எடுக்க முயன்றார். அப்போது அவரது வங்கி கணக்கு முடக்கப்பட்டு இருப்பதாக தகவல் வந்தது.

இதனையடுத்து கலைவாணி குறிப்பிட்ட வங்கிக்கு சென்று அங்குள்ள அதிகாரிகளிடம் ட்இது குறித்து விளக்கம் கேட்டார். அதற்கு வங்கி அதிகாரிகள் ‘அரசுக்கு சரக்கு மற்றும் சேவை வரியாக (ஜி.எஸ்.டி.)ரூ.9கோடியே 48 லட்சம் நீங்கள் செலுத்த வேண்டியது இருப்பதால், உங்கள் வங்கி கணக்கை முடக்கி வைக்கும்படி எங்களுக்கு நோட்டீசு வந்துள்ளது. இதனால் நாங்கள் வங்கி கணக்கை முடக்கி வைத்துள்ளோம்’ என்று கூறி இருக்கிறார்கள்.

இந்த பதிலை கேட்டு கலைவாணி அதிர்ச்சி அடைந்தார். தொழிலே செய்யாத நான் ஏன் ஜி.எஸ்.டி. வரி கட்டவேண்டும்’ என்று கேட்டுள்ளார். அதற்கு அதிகாரிகள் ‘இதற்கு நாங்கள் எதுவும் செய்ய முடியாது என்று கூறிவிட்டனர்.

இதுகுறித்த புகாரின்பேரில் போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில், கலைவாணியின் ஆதார் எண், பான் கார்டு, புகைப்படம், அவரது கையெழுத்து மாதிரி ஆகியவற்றை பயன்படுத்தி, ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் போலியாக நிறுவனம் தொடங்கி வர்த்தகம் செய்திருப்பதும், அவர்கள் ஜி.எஸ்.டி. நிலுவை தொகையை செலுத்தாத குற்றத்திற்காக வங்கி கணக்கு முடக்கப்பட்டு இருப்பதும் தெரியவந்துள்ளது.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

29.11.2025

# சொத்துக் குவிப்பு வழக்கு; பெரியகருப்பன் விடுதலை

சிவகங்கை, நவ.29

2006 முதல் 2011 வரை திமுக ஆட்சியின்போது அறநிலையத்துறை அமைச்சராகவும், திருப்பத்தூர் எம்.எல்.ஏவாகவும் கே.ஆர்.பெரியகருப்பன், இருந்தார். அப்போது வருவாய்க்கு அதிகமாக ரூ.1.20 கோடி அளவில் சொத்து குவித்ததாக 2012 ஆம் ஆண்டு மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் வழக்கு பதிவு செய்தனர். இவ்வழக்கில் அவரது தாயார் கருப்பாயி அம்மாள், மனைவி பிரேமா, மகன் கோகுல கிருஷ்ணன், மைத்துனர் செந்தில்வேல் ஆகியோரும் சேர்க்கப்பட்டனர். இந்த வழக்கு சிவகங்கை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கில் இன்று நீதிபதி அறிவொளி தீர்ப்பளித்தார். அதில், குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீதான சாட்



சியங்கள் நிரூபிக்கப்படாததால் அனைவரையும் விடுதலை செய்து உத்தரவிட்டார். இதையடுத்து, தனது குடும்பத்தினருடன் ஆஜரான அமைச்சர் பெரியகருப்பன் திரும்ப சென்றார். தற்போது கே.ஆர்.பெரியகருப்பன் தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சராக பதவி வகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கீழடி அருகே 800 ஆண்டுகள் பழமையான பாண்டியர் கால கோவில் சிலைகள் கண்டெடுப்பு

சிவகங்கை நவ.29



சிவகங்கை மாவட்டம் கீழடி அருகே அம்பலத்தாடி கிராமத்தில் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த பிற் கால பாண்டியர் காலத்தை சேர்ந்த பெருமாள் கோவில் கல்வெட்டு சிலைகளுடன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மதுரை காமராஜர் பல்கலைக்கழக சமயங்கள், தத்துவம் மற்றும் மனிதநேய சிந்தனைப்புல முதுகலை மாணவர் வினோத், கிராமத்தில் ஆய்வு செய்தபோது இவற்றை கண்டறிந்தார். இதுகுறித்து மாணவர் கூறியதாவது:

இந்து மதப் பிரிவுகளில் ஒன்றாக வைணவம் இடம் பெறுகிறது. தமிழகத்தில் வைணவ கோவில்கள் அதிக அளவில் உள்ளன. அந்த வகையில் சிவகங்கை மாவட்டத்திற்கு உட்பட்ட அம்பலத்தாடி கிராமத்தில், கி.பி. 12ம் நூற்றாண்டை சேர்ந்த சிதைந்த பாண்டியர் கால கல்வெட்டும், பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி, கருடாழ்வார் போன்ற 10 வகையான சிலைகளும் சிதைந்த நிலையில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவ்வூர் பாண்டியர்களின் ஆட்சி காலத்தில், சதுர்வேதி மங்கலமான பிராமண குடியிருப்பாக இருந்து வந்துள்ளது. இவர்கள் இப்பகுதியில் உள்ள பெருமாள் கோவிலை வழிபட்டு வந்திருக்கின்றனர்.

அவர்கள் காலப்போக்கில் இடம்பெயர்ந்து சென்றதால் கோவில் வழிபாடின்றி காணப்பட்டுள்ளது. கோவில் மூலவரான பெருமாள் சிலை, சிதைந்த நிலையில் 72 செ.மீ. உயரத்துடனும் 38 செ.மீ. அகலத்துடனும் உள்ளது. தலைப்பகுதிக்கு மேல் சேதம் ஏற்பட்டுள்ளது. இச்சிலையில் பின்னிரு கைகளில் சங்கு, சக்கரம் உள்ளது. வலது முன்கை அபய முத்திரையுடனும், இடதுமுன் கை கட்டிய வலம்பித முத்திரையுடனும் காணப்படுகிறது. ஸ்ரீதேவி, பூதேவி சிலைகள் முற்றிலும் உடைந்து காணப்படுகின்றன. கழுத்தணிகள், கையணிகள், தோளணிகளுடன் சிலை வடிக்கப்பட்டுள்ளது. தலையில் கிரீடத்துடன் கூடிய கருடாழ்வார் சிலை, தொடைக்கு கீழ்ப்பகுதி முற்றிலும் சிதைந்த நிலையில் கிடக்கிறது.

இதுகுறித்து தொல்லியல் ஆய்வாளர் நாராயணமூர்த்தி கூறியதாவது: கோவிலின் சிதைந்த பாகங்கள் கிராமத்தில் ஆங்காங்கே சிதறி கிடக்கின்றன. கி.பி.12ம் நூற்றாண்டு எழுத்தமைதியுடன் கூடிய 2 வரி துண்டு கல்வெட்டு, உடைந்த நிலையில் காணப்படுகிறது. இங்கு நடத்தப்பட்ட ஆய்வில் 2 பெருமாள் சிலைகள், 2 ஸ்ரீதேவி, பூதேவி சிலைகள் கிடைப்பதாலும் அவை வெவ்வேறு காலகட்டத்தை சேர்ந்தவையாக இருப்பதாலும் முன்பு இங்கிருந்த பெருமாள் கோவில் அழிவுற்றதால் அது புதுப்பிக்கப்பட்டதும், மீண்டும் சிதலமடைந்ததையும் அறிய முடிகிறது என்றார்.

# அரசியல் கட்சிகளின் ரோடு ஷோ வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பான வழக்கு ஐகோர்ட்டில் விசாரணை ஒத்திவைப்பு

சென்னை, நவ.29

அரசியல் கட்சிகளின் கூட்டங்கள், ரோடு ஷோக்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்க வேண்டும் என சென்னை ஐகோர்ட்டில் பொதுநல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. கடந்த முறை இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது தமிழக அரசு தரப்பில் வரைவு வழிகாட்டு நெறிமுறைகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த நிலையில், இந்த வழக்கு இன்று தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது அ.தி.மு.க., த.வெ.க. மற்றும் தேசிய மக்கள் சக்தி கட்சி சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், இந்த வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பாக தங்கள் கட்சிகளின் சார்பில் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்கும் முன்பு தங்கள் கட்சிகளை தமிழக அரசு கலந்தாலோசிக்கவில்லை என்றும் புகார் தெரிவித்தனர்.

அ.தி.மு.க. தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், மத வழிபாட்டுத் தளங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கும் இது போல் வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க வேண்டும், கூட்டங்களுக்கு அனுமதி மறுக்கும்போது அதற்கான காரணங்களை தெரிவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளை தெரிவித்தார்.

த.வெ.க.தரப்பில் ஆஜரானவழக்கறிஞர், கூட்டங்கள், ரோடு ஷோக்களை நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட இடங்கள் தொடர்பான விவரங்களை இணையதளத்தில் வெளியிட வேண்டும், அங்கு எத்தனை பேர் நிற்கலாம், எத்தனைபேர்உட்காரலாம்என்பனஉள்ளிட்டஅனைத்து விவரங்களையும் அதில் குறிப்பிட வேண்டும் என வலியுறுத்தினார்.

இதையடுத்து தமிழக அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி, அனைத்து கட்சிகளையும் கலந்து ஆலோசித்த பிறகுதான் வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளதாகவும், கூட்டங்கள், ரோடு ஷோக்களை நடத்த அனுமதிக்கப்பட்ட இடங்கள் குறித்து இணையத்தில் தகவல்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் விளக்கமளித்தார்.

அனைத்து வாதங்களையும் பதிவு செய்து கொண்ட நீதிபதி, "தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பார்க்கும்போது, ரோடு ஷோக்களுக்கு அனுமதி பெறுவது தேர்வு எழுதி வெற்றி பெறுவது போல் இருக்கிறது. விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டதா, அல்லது நிராகரிக்கப்பட்டதா என்பதை முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

மேலும் வழிகாட்டு நெறிமுறைகளில் கூறப்பட்டுள்ள ஒவ்வொருபிரிவும்அடிப்படைஉரிமைகளைமீறக்கூடிய வகையில் இருப்பதாக கூறி வழக்கு தொடரக்கூடிய நிலையில் உள்ளது என்று குறிப்பிட்ட நீதிபதி, வழக்கின் விசாரணையை நாளைய தினத்திற்கு ஒத்திவைத்தார்.

# இன்றைய ராசி பலன்கள் (29.11.2025)

மேஷம்: புதிய முயற்சிகள் வெற்றியடையும் நாள். நண்பர்களிடம் இருந்து ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் சிறிய லாபம் உண்டு.

ரிஷபம்: உழைப்புக்குஏற்றபலன்கிடைக்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.செலவுகள்கட்டுப்பாட்டில் இருக்கும்.

மிதுனம்: சில எதிர்பாராத தடை ஏற்பட்டாலும் அதைக் கடந்து முன்னேறுவீர்கள். நண்பர்கள் உங்களை ஊக்குவிப்பர்.

கடகம்: வீட்டு வேலைகளில் அதிக ஈடுபாடு. உடல் சோர்வு இருந்தாலும் மனநிம்மதி உண்டு. புதிய உறவு உருவாக வாய்ப்பு.

சிம்மம்: தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள், சாதனை உங்கள் பக்கம். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

கன்னி: நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும் நாள். சொத்து சம்பந்தமான விவகாரத்தில் நல்ல முடிவு.

துலாம்: புதிய வாய்ப்புகள் வரலாம். அதிர்ஷ்டம் உங்களுடன் இருக்கும். நண்பர்கள் நம்பிக்கையுடன் நடப்பர்.

விருச்சிகம்: உடல்நலம் கவனிக்க வேண்டிய நாள். உறவினர்களிடம் நிதானமாக பேசுங்கள்.பொறுமைதேவை.

தனுசு: வெளிநாட்டுச் செய்தி உங்களை மகிழ்விக்கும். கல்வியில் முன்னேற்றம். தொழிலில் புதிய வாய்ப்பு.

மகரம்: அழுத்தமான பணி இருந்தாலும் மனநிம்மதி உண்டு. குடும்பத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள்.

கும்பம்: புதிய முயற்சி தொடங்க சிறந்த நாள். தொழிலில் முன்னேற்றம் உண்டு. எதிரிகள் விலகுவர்.

மீனம்: மன அமைதி பெறுவீர்கள். உறவினர்கள் மதிப்புடன் நடப்பர். நீண்டநாள் குழப்பம் தீரும்.

# சபரிமலையில் கோவை பக்தர் உயிரிழப்பு

கோவை, நவ.29

சபரிமலை அய்யப்பன் கோவிலில் நடப்பு மண்டல, மகர விளக்கு சீசனை முன்னிட்டு கடந்த 16ந் தேதி நடை திறக்கப்பட்டது. 17ந் தேதி மண்டல சீசன் தொடங்கியது. அடுத்த மாதம் (டிசம்பர்) 27ந் தேதி மண்டல பூஜையும், ஜனவரி மாதம் 14ந் தேதி மகரவிளக்கு வழிபாடும் நடக்கிறது.

ஆன்லைன் முன்பதிவு அடிப்படையில் தினசரி 70 ஆயிரம் பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள். மேலும் தற்போது உடனடி தரிசன முன்பதிவு என்ற அடிப்படையில் தினசரி 5 ஆயிரம் பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் ஆன்லைன் முன்பதிவு செய்து வரும் பக்தர்களின் வருகைக்கு ஏற்ப உடனடி தரிசனத்திற்கு கூடுதல் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள்.

சபரிமலையில் கடந்த 10 நாட்களில் 9 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்துள்ளனர். இதனிடையே அடுத்த மாதம் 24ந் தேதி வரை ஆன்லைன் முன்பதிவு முழுமையாக முடிந்து விட்டது. மண்டல பூஜையை முன்னிட்டு டிசம்பர் 25, 26, 27 ஆகிய 3 நாட்களுக்கான முன்பதிவு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது.

மேலும் மகரவிளக்கை முன்னிட்டு ஜனவரி 10ந்தேதி வரையிலான ஆன்லைன் முன்பதிவு (தினசரி 70 ஆயிரம்) தற்போது நடைபெற்று வருவதாக திருவிதாங்கூர் தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

இந்தநிலையில் சபரிமலை யாத்திரை மேற்கொண்ட கோயம்புத்தூர் மாவட்டத்தை சேர்ந்த 50 வயதான முரளி என்பவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். இதுதொடர்பாக நடத்திய முதற்கட்ட விசாரணையில் முரளி மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்ததாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். சபரிமலையில் இதுவரை மாரடைப்பு உள்ளிட்ட காரணங்களால் பக்தர்கள் 9 பேர் உயிரிழந்துள்ளனர். சபரிமலை அய்யப்பன் கோயிலுக்கு சென்ற தமிழக பக்தர் ஒருவர் உயிரிழந்தது அதிர்ச்சி ஏற்படுத்துள்ளது.

## வாரிசு நடிகர் என்ற விமர்சனத்தால் பாதிப்பா? அதர்வா விளக்கம்



நடிகர் அதர்வா 'பாணா காத்தாடி, பரதேசி, சண்டிவீரன்' போன்ற படங்களின் மூலம் ரசிகர்கள் மத்தியில் நீங்கா இடம் பிடித்தவர். இவர் நடித்த 'டிஎன்ஏ' படம் நல்ல வரவேற்பை பெற்றது சுதா கொங்கரா இயக்கி வரும் 'பராசக்தி' படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். அதர்வா, கயாடு லோஹர் நடிக்கும் 'இதயம் முரளி' படத்தின் இறுதிகட்ட படப்பிடிப்புகள் நடைபெற்று வருகிறது.

நடிகர் அதர்வாவின் அப்பாவான முரளி 'இதயம்' படத்தில் நடித்து பிரபலமானார். முரளிக்கு மிகப்பெரிய வெற்றிப்படமாக அமைந்தது. அதைப்போல் அதர்வாவிற்கும் 'இதயம் முரளி' திரைப்படம் வெற்றிப் படமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதர்வாவிடம் 'வாரிசு நடிகர் என்ற விமர்சனத்தை எப்படி எதிர்கொண்டீர்கள்?' என்று கேட்கப்பட்டது. அதற்கு அதர்வா பதிலளிக்கையில் "விமர்சனங்கள் பெரியளவில் வரவில்லை என்றாலும், எனக்கும் சவால்கள் என்பது இருந்தது. என்னதான் ஒரு அடையாளத்துடன் வந்தாலும், நான் சந்தித்த ஒவ்வொரு களமும் எனக்கென உத்வேகத்தை தந்தது. அடையாளத்தை ஏற்படுத்தியது. எனவே விமர்சனங்கள் என்னை பாதிக்கவில்லை" என்றார்.

## டியூட் படத்தில் இளையராஜா பாடல்களை நீக்க உத்தரவு



தீபாவளிக்கு வெளியான டியூட் திரைப்படத்தில், தனது இசையமைப்பில் வெளியான புது நெல்லு புது நாத்து திரைப்படத்தில் இடம்பெற்றிருந்த, கருத்த மச்சான் மற்றும் பணக்காரன் படத்தில் இடம்பெற்றிருந்த 100 வருஷம் இந்த மாப்பிள்ளைக்கு ஆகிய பாடல்களை தனது அனுமதியின்றி, உருமாற்றி பயன்படுத்தியுள்ளதாகக் கூறி இசையமைப்பாளர் இளையராஜா சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், இரண்டு பாடல்களையும் பயன்படுத்த தடை விதிக்க வேண்டும், பாடல்களை நீக்க உத்தரவிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த வழக்கை, நீதிபதி என். செந்தில்குமார் விசாரித்தார். இளையராஜா தரப்பில், தனது அனுமதி இல்லாமல் பதிப்புரிமைச் சட்டத்தை மீறும் வகையில் இந்த பாடல்கள் படத்தில் பயன்படுத்தப்பட்டு உள்ளன. பாடலை உருமாற்றி உள்ளதால் பாடல்களை பயன்படுத்த தடை விதிக்க வேண்டும் என்று வாதிடப்பட்டது.

டியூட் திரைப்பட தயாரிப்பு நிறுவனமான மைத்திரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தரப்பில், பாடல்களின் உரிமையை எக்கோ நிறுவனத்திடமிருந்து சோனி நிறுவனம் பெற்றிருந்ததாகவும், சோனி நிறுவனத்திடம் இருந்து அனுமதியை பெற்று, இந்த பாடல்களை படத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இது தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, இளையராஜாவின் பாடல்களை உருமாற்றி பயன்படுத்தி உள்ளதற்கு முகாந்திரம் உள்ளது. அவரது பாடல்களின் புனிதத்துக்கும், அவரது நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அனுமதியின்றி பயன்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறி, டியூட் படத்தில் இளையராஜாவின் பாடல்களை பயன்படுத்த இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

மேலும் மனுவுக்கு பதிலளிக்கும்படி மைத்திரி மூவி மேக்கர்ஸ் நிறுவனத்துக்கு உத்தரவிட்டு, விசாரணையை அடுத்தாண்டு ஜனவரி 7ந்தேதிக்கு தள்ளிவைத்தார்.

இந்த உத்தரவை அமல்படுத்தும் வகையில், படத்தில் இடம்பெற்றுள்ள பாடல்களை நீக்க ஏதுவாக ஒரு வார அவகாசம் வழங்க வேண்டும் என, பட நிறுவனம் தரப்பு கோரிக்கையை நீதிபதி ஏற்க மறுத்து விட்டார்.

## சிம்ரன் சவுத்ரியின் அடுத்த படம்...டீசர் வெளியீடு





சிம்ரன் சவுத்ரி கதாநாயகியாக நடிக்கும் அடுத்த படம் வானரா. இப்படத்தின் மூலம் அவினாஷ் திருவீடுலா நாயகனாகவும் இயக்குநராகவும் அறிமுகமாகிறார். இந்த படத்தில் நந்து வில்லனாக நடிக்கிறார்.

"வானரா" படத்தை சில்வர் ஸ்கிரீன் சினிமாஸ் என்ற பதாகையின் கீழ் அவினாஷ் புயானி, அவபதி ராஜா மற்றும் சி. அங்கித் ரெட்டி ஆகியோர் தயாரித்து வருகின்றனர். விவேக் சாகரின் இசையமைக்கும் இப்படத்தின் டீசர் வெளியாகி இருக்கிறது.

டீசரில், ஹீரோ அவினாஷ் பைக்கில் செல்வதும், அவரைப் பின்தொடர்ந்து பறந்து செல்வதும் காணப்பட்டுள்ளது. விரைவில் மற்ற அப்டேட்டுகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சாக்சி மடோல்கரின் 'மௌக்லி' 'வனவாசம்' பாடல் வெளியீடு



சாக்சி மடோல்கர் கதாநாயகியாக நடிக்கும் 'மௌக்லி' படத்தின் புதிய பாடல் புரோமோ வெளியாகி உள்ளது. கலர் போட்டோ புகழ், சந்தீப் ராஜ் இயக்கியுள்ள இந்த படத்தில் இளம் ஹீரோ ரோஷன் கனகலா கதாநாயகனாக நடித்துள்ளார்.

பண்டி சரோஜ் குமார் வில்லனாகவும், ஹர்ஷா செமுடு முக்கிய கதாபாத்திரத்திலும் நடிக்கிறார்கள். இப்படம் டிசம்பர் 12ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இதற்கிடையில், இப்படத்தின் 2வது பாடலான 'வனவாசம்' பாடல் வெளியாகி இருக்கிறது.

## சையத் முஷ்டாக் அலி கோப்பை கிரிக்கெட்: தமிழக அணியை வீழ்த்தி டெல்லி வெற்றி




18வது சையத் முஷ்டாக் அலி கோப்பைக்கான டி20 கிரிக்கெட் போட்டி ஆமதாபாத், ஐதராபாத், கொல்கத்தா, லக்னோ ஆகிய நகரங்களில் நடைபெற்று வருகிறது.

இதன் 'எலைட்' பிரிவில் பங்கேற்கும் 32 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு தங்களுக்குள் மோதுகின்றன. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர் லீக் சுற்றுக்குள் நுழையும். 'பிளேட்' பிரிவில் கலந்து கொண்டுள்ள 6 அணிகள் இடையிலான ஆட்டம் புனேயில் நடக்கிறது.

இதில் ஆமதாபாத்தில் இன்று நடந்த ஒரு ஆட்டத்தில் (டி பிரிவு) தமிழ்நாடு டெல்லி அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற டெல்லி அணியின் கேப்டன் நிதிஷ் ராணா பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த தமிழக அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்கள் ஆன அமித் சாத்விக் துஷார் ரஹேஜா சிறப்பாக ஆடினர். முதல் விக்கெட்டுக்கு 115 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் இந்த ஜோடி பிரிந்தது. இருவரும் அரைசதம் கடந்த நிலையில் சாத்விக் 54 ரன்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த சாய் சுதர்சன் 13 ரன்களிலும், ஷாருக்கான் 6 ரன்களிலும் ஆட்டமிழந்து ஏமாற்றினர். மறுமுனையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய

துஷார் ரஹேஜா 72 ரன்களில் நடையை கட்டினார்.

இதனால் இறுதி கட்டத்தில் தமிழக அணியின் ரன் வேகம் குறைந்தது. பின்னர் வந்த வீரர்களில் ஜெகதீசன் (13 ரன்), சோனு யாதவ் (5 ரன்) மற்றும் ராஜ் குமார் (9 ரன்) யாரும் நிலைக்கவில்லை.

20 ஓவர்கள் முடிவில் தமிழக அணி 7 விக்கெட்டுகளை இழந்து 198 ரன்கள் அடித்தது. டெல்லி தரப்பில் பிரின்ஸ் யாதவ் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.


இதனையடுத்து 199 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி ஆடிய டெல்லி அணி ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடியது. தொடக்க ஆட்டக்காரர் பிரியன்ஷ் ஆர்யா வெறும் 15 பந்துகளில் 35 ரன்கள் அடித்து ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் ஆன யாஷ் துள் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

அவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த நிதிஷ் ராணா 34 ரன்களில் ஆட்டமிழந்தார். பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய யாஷ் துள் 71 ரன்களில் அவுட்டானார். இறுதி கட்டத்தில் ஆயுஷ் பதோனி அதிரடியாக விளையாட (41 ரன்கள்) டெல்லி அணி வெற்றியை நோக்கி பயணித்தது.

அவர் ஆட்டமிழந்ததும் வெற்றி தமிழக அணி பக்கம் திரும்புவது போல் தெரிந்தது. இருப்பினும் ஹிம்மத் சிங் 4 பந்துகளில் 11 ரன்கள் அடித்து டெல்லி அணியை வெற்றி பெற வைத்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் டெல்லி அணி 4 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 203 ரன்கள் குவித்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தமிழக அணி தரப்பில் சோனு யாதவ் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

## ஜூனியர் ஆசிய கோப்பை கிரிக்கெட்: இந்திய அணி அறிவிப்பு.. கேப்டன் யார் தெரியுமா..?



8 அணிகள் இடையிலான 12வது ஜூனியர் ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் (19 வயதுக்கு உட்பட்டோர்) டிசம்பர் 12ம் தேதி முதல் 21ம் தேதி வரை துபாயில் நடைபெற உள்ளது.

இந்த தொடருக்கு இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய 5 அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன. மீதமுள்ள 3 அணிகள் தகுதி சுற்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட உள்ளன.

இதில் பங்கேற்கும் அணிகள் 2 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோது. அதன் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும். இதில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ளன. அத்துடன் தகுதி சுற்றின் மூலம் தேர்வாகும் 2 அணிகள் இதில் இடம்பெறும். இந்த தொடரில் இந்தியா பாகிஸ்தான் ஆட்டம் டிசம்பர் 14ம் தேதி நடைபெற உள்ளது.

இந்நிலையில் இந்த தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயுஷ் மாத்ரே தலைமையிலான அந்த அணியில் வைபவ் சூர்யவன்ஷி, விஹான் மல்ஹோத்ரா போன்ற நட்சத்திர வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இந்திய அணி விவரம்: ஆயுஷ் மாத்ரே (கேப்டன்), வைபவ் சூர்யவன்ஷி, விஹான் மல்ஹோத்ரா, வேதாந்த் திரிவேதி, அபிக்யான் குண்டு, ஹர்வன்ஷ் சிங், யுவராஜ் கோஹில், கனிஷ்க் சௌஹான், கிலன் ஏ.படேல், நமன் புஷ்பக், டி.தீபேஷ், ஹெனில் படேல், கிஷன் குமார் சிங், உத்தவ் மோகன், ஆரோன் ஜார்ஜ்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.